எம்.சி.ஓ.பி எண்: 5520/2022 தேதி: 27.03.2025

மசா. : 1
பெயர் : சுப்ரமணியன்
த/பெ. : ராமன்
வயது : 59

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து காண்பித்தார்கள் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தொியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 7 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து ஸ்ரீபெரம்புத்தூர் ஒரக்கடம் 6 வழி சாலையில் விபத்து நடந்து. அந்த இடத்தில் தெருவிளக்கு உள்ளது. வரைபடமும், விபத்து பதிவேட்டு நகலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் சாலையை கடக்கும்போது வண்டி வருவதை பார்த்துதான் கடந்தேன். அந்த இடத்தில் ்மத்தியில் தடுப்புச்சுவர் இல்லை. அந்த இடத்தில் பாதசாாிகள் கடக்கும்கோடு இருந்தது. அந்த இடத்தில் பாதசாாிகள் கடக்கும்கோடே கிடையாது என்பதால்தான் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தீடிரென்று எப்படி வண்டி வந்தது என்று தொியவில்லை. நான்தான் வண்டி வருவதை கவனிக்காமல் சாலையை தீடிரென்று கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிருதையால் விபத்து நடந்தது என்றால ்சரியல்ல. தொழில் வருமானம் , வருமானஇ ழப்புக்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 18.10.2022க்கு பிறகு தொடர்சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்ட காரணத்தால்தான் தொடர்சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டிக்கு ஓட்டுநர் உாிமம் இல்லாத காரணத்தால் காப்பீடு விதிமுறைகள் மீறப்பட்டுள்ள காரணத்தால் நான் எதவாது இழப்பீடு பெறவேண்டுமானால் முதலாம் எதிர்மனுதாரரிடமிருந்தான் பெறவேண்டும் என்றாலும் இரண்டாம்

எதிர்மனு தாரர் பொறுத்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.